2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 10/1984).

2. 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச்) சட்ட முன்வடிவு எண் 40/1983).

3. கவன ஈர்ப்பு

கரூர், தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டத்தை மத்திய அரசு துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ளாததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

" கரூர், தூத்துக்குடி அகல ரயில் பாதை திட்டத்தை மத்திய அரசு துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளாததால் மக்கள் மத்தியிலும், தமிழக வணிகர் கழகங்களின் மத்தியிலும் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து ".

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை, திருச்சி, பெரியார் இந்த 3 மாவட்டங்களும் சந்திக்கும் இடத்திலே பணப் பயிர் உற்பத்தி செய்யக்கூடிய பெரும் பிரதேசம் இரயில் வசதியற்று இருப்பதை மாற்றி அங்கே போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதற்கும் கர்நாடக மாநிலத்தோடு சுலபமாகத் தொடர்பு கொள்ளவும், தூத்துக்குடி துறைமுக அபிவிருத்திக்கும் இந்தக் கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதை பயன்படுமென்று தான்

தமிழக மக்கள் நம்புகிறார்கள். ஆனால் மத்திய அரசு மணியாச்சி வழியாக தூத்துக்குடிக்கும், திருநெல்வேலிக்கும் மட்டும் அகல ரயில் பாதையைப் போடுவதற்காக 70 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கும் இந்த சப்ஜெக்டுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? நாங்கள் கேட்கிற கோரிக்கைக்கும் மத்திய அரசிலிருந்து வரும் தகவலுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறதே. மத்திய அரசு எப்படி விளக்குகிறது என்பது புரிய வில்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களே, நாம் முதலிலே கேட்டபோது அப்படித்தான் கேட்டோம். அது மட்டு மல்ல, பல்வேறு திட்டங்களோடு இதையும் இணைத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னோம். நிதி நிலைமைகள் காரணமாக எடுத்துக் கொள்ள முடியாது என்று சொல்லி, குறைந்த அளவுக்கு அவர்களால் எவ்வளவு தர முடியுமோ அந்த அளவுக்குத் தருவதாக இப்போது சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே அதைப்பற்றி ஆலோசிப்போம் என்று சொல்லியிருக்கின் றார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : 1978 ஆம் ஆண்டிலிருந்து, 6 வருடங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட வாக்குப் பிரகாரம் 44 கோடி ரூபாய் செலவழிக்கப்பட வேண்டிய ரெயில்வேக்களுக்கு, 6 வருடத்தில் 6 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப் பட்டிருக்கிறது. இதிலே கட்டிடங்கள் கட்டி வைத்துக்கொண்டு மற்ற எந்த விதமான ஏற்பாடும் செய்யப்படாமல் இருக்கிறது. தமிழக அரசும், தமிழ் நாட்டு மக்களும் மீண்டும் மீண்டும் கேட்டும்கூட மத்திய அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்யாமல் இருக்கிறது. ஆகவே தமிழக அரசு இந்த மேலவையி லும், பேரவையிலும் அரசின் சார்பிலே அந்த ரெயில்வே வேலைகளை துரித மாக மேற்கொள்ள வேண்டுமென்று தமிழகத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக் கின்ற அளவுக்கு ஒரு தீர்மானத்தை வைத்து நிறைவேற்ற மாநில அரசு முன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களே, அந்தக் காரணத்தால்தான் அவர்கள் முதலிலே பணம் ஒதுக்குவதற்கே தயக்கம் காட்டினார்கள். நம்முடைய அரசாங்கம், நமது முதலமைச்சர் அவர் கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக பணம் ஒதுக்குவதற்கு ஒப்பு தலைத் தந்து பணத்தை ஒதுக்கினார்கள். ஒரே நேரத்தில் அத்தனையையும்

@ 444-446 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முதல்வர் அவர்கள் 2, 3 முறைகளுக்கு மேலே கடிதம் எழுதியிருக்கிறார்கள். கடைசியாக சமீபத்திலே கூட ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த விவரம் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. நாம் இவ்வளவு பெரிய விவாதத்தை இங்கே வைக்கின்றபோது, அதற்கு என்று ஒரு தனித் தீர்மானம் தேவையா என்பது யோசனையாக இருக்கிறது. இதிலே இந்த உணர்வுகளைக்கூட நாம் கடிதத்தின் மூலமாக மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளலாம்.

4. அரசின் தீர்மானம்.

நெய்வேலி அனல் மின் நிலையம் மற்றும் கல்பாக்கம் அணு மின் நிலையத்தி லிருந்து உற்பத்தியாகிற மின்சாரத்தை தமிழகத்திற்கு வழங்குவது குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்: தலைவர் அவர்களே, மைய அரசு அதன் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மாநிலங் களுக்கு பகிர்ந்து அளிப்பது சம்பந்தமாக ஒரு கொள்கையை 1978 ஆம் ஆண்டு வகுத்தது. இக்கொள்கை மின்சாரம் பற்றாக் குறை உள்ள மாநிலங்களுக்கு குறைவாகவும், உபரி மாநிலங்களுக்கு மேலும் அதிக மின்ாரம்சாரம் பெறுவ தற்கும் வாய்ப்பளிக்கிறது. தமிழ் நாட்டில் தொடர்ந்து இருந்துவரும் மின் பற்றாக்குறை காரணமாக மேற்படி கொள்கையை மாற்றி யமைக்கும்படி மத்திய அரசிடம் பலமுறை முறையீடு செய்தும் கூட, இக்கொள்கையை மத்திய அரசு தொடர்ந்து கடைபிடித்து வருவதைக் குறித்து இம்மேலவை மிகுந்த கவலை கொள்கிறது. எனவே, இக்கொள்கை முறையானது அல்ல என்று இந்த மேலவை கருதுகிறது. மைய மின் நிலையங்களிலிருந்து உற்பத்தி யாகும் மின்சாரத்தை மின் பற்றாக்குறைக்கு ஏற்ப மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து அளிக்க ஒரு முறையான கொள்கையை பின்பற்றுமாறு மைய அரசைக் கேட்டுக் கொள்வதென இம்மேலவை தீர்மானிக்கிறது.

2. நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரை யில், மைய அரசு மேற்கூறிய கொள்கையைப் பின்பற்றி வருவது பற்றியும், சென்னை அணு மின் நிலையம் பிரிவு 1-லிருந்து கிடைக்கும் மின்சாரம் முழுவதையும் தமிழ் நாட்டிற்கு வழங்குவது குறித்து, இன்னமும் எவ்வித முடிவையும் எடுக்காதது பற்றியும் இம்மேலவை கவலை தெரிவிக்கிறது. தமிழ் நாட்டில் கடந்த இருபது ஆண்டு காலமாக, மின் உற்பத்தியைக் குறித்து திட்ட மிடுகையில், இவ்விரு மின் நிலையங்களின் உற்பத்தி முழுவதும் தமிழ்